# தன்னிறைவுத் திட்டம்

முன்னுரை:

சமுதாய சொத்துக்களை திட்டமிட்டு உருவாக்குவதற்கும், நிதியளிப்பதற்கும் அவற்றின் நிலைப்பு தன்மைகளை உறிதி செய்வதற்கும் பொதுமக்களின் பங்கேற்பு அவசியமானதாகும். பொதுமக்களின் சுயசார்பு தன்மையை ஊக்குவிப்பதற்கும். மேன்மைப்படுத்துவதற்கும், சமுதாய உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி பராமரிப்பதில் அவர்களின் பங்களிப்பை அதிகரித்து அதன்மூலம் தன்னிறைவு பெறச் செய்யவும் அரசு தன்னிறைவு திட்டத்தினை 2011-12 ம் ஆண்டு முதல் செயல்படுத்துகிறது. இந்த வகையான பொதுமக்கள் பங்கேற்பு அணுகுமுறையுடன் மொதுமக்கள் பங்கேற்பு மற்றும் அரசு நிதி உதவியுடன் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் சமுதாயத்தின் தேவைகள் தன்னிறைவு அடைவதற்கு வழிவகை செய்கிறது.

பொதுமக்கள் பங்களிப்பு:

- கண்டறியப்படும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகையில் முன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் பொதுமக்களின் பங்களிப்பு இருக்க வேண்டும்.

தன்னிறைவு திட்டத்தின் கீழ் பணிகளைத் தேர்வு செய்வதற்கான நடைமுறைகள்:

- தன்னிறைவுத்திட்டத்தின் கீழ் பணிகளை எடுத்துச் செய்வதற்கான தேவை குறித்த கருத்து, தனிநபர், குழுக்கள், நிறுவனங்கள், பொது அல்லது தனியார் நிறுவனங்கள் அல்லது சமுதாயம் ஆகியவற்றின் மூலமாக உருவாக்கலாம்.
- எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய பணியினை குறிப்பிட்டு பொது மக்களின் பங்களிப்பான மூன்றில் ஒரு பங்கு தொகையை வழங்க சம்மதம் தெரிவித்து விண்ணப்ப படிவம் ஒன்று கோரிக்கை வடிவில் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் கொடுக்க வேண்டும்.
- மாவட்ட ஆட்சித்தலைவர், மேற்கொள்ள வேண்டிய பணியின் அத்தியாவசியத் தேவை மற்றும் இதனை நடைமுறைப்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் குறித்து திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி உறுதி செய்வார். அவ்விதிமுறைகள் திருப்தி அளிக்கும் பட்சத்தில் திட்டப்பணியினை செயல்படுத்தும் முகைமையிடம் விளக்கமான மதிப்பீட்டினை மாவட்ட ஆட்சித்தலைவர் கோருவார். அனுமதி வழங்க ஏதுவாக விண்ணப்பதாரர் செலுத்த வேண்டிய உரிய தொகைக்கான கேட்பு

வரைவோலையை மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரிடம் செலுத்த வேண்டும்.

- உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக் கழகங்கள் வழங்கும் பங்களிப்பு நிதி இத்திட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- பணிகளைச் செய்வதற்கு உள்ளாட்சி அமைப்பு அல்லது சம்மந்தப்பட்ட துறையின் அனுமதி தேவையெனில் அதற்கான அனுமதியை, நிர்வாக அனுமதி வழங்குவதற்கு முன், மாவட்ட ஆட்சித்தலைவரால் பெறப்படவேண்டும்.
- உருவாக்கப்படும் சொத்துக்கள், உள்ளாட்சி அமைப்பு அல்லது துறையின் பராமரிப்பின் கீழ் இருக்க வேண்டியிருப்பின், அச்சொத்துக்களை உருவாக்க சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு/துறையின் ஒப்புதலை மாவட்ட ஆட்சித்தலைவர் பெறவேண்டும்.
- இத்திட்டத்திற்கு மாநில அளவில் ஒவ்வொரு ஆண்டிற்கும் நிதி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ஒதுக்கீடு வழங்கப்படும்.
- குறைவான நிதி இருக்கும் பட்சத்தில், பல்வேறு பணிகளை செய்ய கோரிக்கைகள் வரப்பெறின், அவற்றில் மிக அதிக அளவில் சமுதாயத்திற்கு பயன்தரும் பணிகளை மாவட்ட ஆட்சியர் கண்டறிந்து அத்தகைய பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.
- மாநில அளவில் செயல்படுத்தப்படும் சிறப்பு திட்டங்களுக்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அதற்கான பங்களிப்பை தனியார் அல்லது பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து பெறலாம்.

**எடுத்துச் செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்ட பணிகளின் பட்டியல்:**

- அரசு பள்ளிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய பள்ளிகள், கள்ளர் சீரமைப்பு பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகளுக்கு கட்டடங்கள், ஆய்வகங்கள், கழிவறைகள் கட்டுதல், மிதி வண்டி நிறுத்துமிடம் மற்றும் சுற்றுச்சுவர்/ சுற்றுவேலி அமைத்தல்
- அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், கால்நடை மருந்தகங்கள், கால்நடை வளர்ப்பு மையங்கள் மற்றும் நூலகங்கள் ஆகியவைகளுக்கு கட்டடங்கள் கட்டுதல் மற்றும் சுற்றுச்சுவர்/சுற்றுவேலி அமைத்தல். வக்ஃபு வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட பொது இஸ்லாமிய அறக்கட்டளைக்கு சொந்தமான இடுகாடுகள் உட்பட இடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் அமைத்தல் மற்றும் இதர பொது வசதிகள் மேற்கொள்ளுதல்

- ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் நூலகங்கள் கட்டுதல் மற்றும் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் சுத்துணவு மையங்கள், அங்கன்வாடிகள், பள்ளி சமையல் கூடங்கள் மற்றும் பொது விநியோக கடைகள் ஆகியவைகளுக்கு கட்டடங்கள் கட்டுதல்.
- ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் சமுதாய கட்டிடங்கள், குடிநீர் வழங்குதல், சிமெண்ட் கான்கீரிட் சாலைகள் மற்றும் கதிரடிக்கும் களங்கள் போன்ற சமுதாய சொத்துக்களை உருவாக்குதல்.
- ஆண்கள் மற்றும் பெண்களுக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டுதல்
- பாலங்கள், சிறிய பாலங்கள் கட்டுதல், சரளை/கப்பிச் சாலைகளை தார்சாலைகளாக தரம் உயர்த்துதல், பழுதடைந்த தார்சாலைகளை புதுப்பித்தல், தெருக்கல் மற்றும் சிறிய சந்துக்களை செங்கல் அல்லது கப்பி கற்கள் அல்லது சிமெண்ட் பலகை அல்லது சிமெண்ட் கான்கீரிட் கொண்டு சீரமைத்தல்
- பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், சாலைத்திட்டு மற்றும் நீரூற்று போன்றவற்றை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்
- அரசு பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய பள்ளிகள், நூலகங்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிலுள்ள கட்டடங்களுக்கு தேவையான அறைகலன்கள், கணினிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை வாங்குதல். பழைய கணினிகள் மற்றும் உபகரணங்கள் வாங்கக்கூடாது.
- திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை தொடர்பான அனைத்து வகைப்பணிகள் மற்றும் சுற்றுச்சூழல் சுசுhதாரம் தொடர்பான மேம்பாட்டு பணிகள்.
- அரசு மற்றும் ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான பொது கட்டடங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கு சூரிய ஒளி விளக்குகள் அமைத்தல்
- குடிநீர் வழங்குவதற்கான எதிர் சவ்வூடு பரவல் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்

தடை செய்யப்பட்ட பணிகள்

- ❖ மத்திய அரசு, மாநில அரசு, பொதுத்துறை, கூட்டுறவு போன்ற நிறுவனங்களுக்கு கட்டடங்கள் கட்ட இயலாது.
- ❖ தனிநபர் / குடும்ப பயனுக்காக சொத்துக்களை உருவாக்க இயலாது.
- ❖ புதுப்பித்தல் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள இயலாது.

- அசையும் பொருட்கள் , உபகரணங்கள் மற்றும் தளவாட சாமான்கள் வாங்கக் கூடாது.
- அரசு உதவிபெறும் / சுயநிதி பள்ளிகள் , பாலிடெக்னிக்குகள் மற்றும் கல்லூரிகளில் எவ்வித பணிகளையும் மேற்கொள்ள இயலாது.
- வணிக நிறுவனங்கள் / தொழிற்சாலைகளில் பணிகள் மேற்கொள்ள கூடாது.
- கடன் மற்றும் மான்யம் மத்திய / மாநில / யூனியன் பிரதேச நிவாரண நிதிக்கு பங்களித்தல் கூடாது.
- நில எடுப்பு / நில எடுப்பு ஈட்டுத் தொகை போன்றவை வழங்க கூடாது.
- ஏற்கனவே முழுமையாக / பகுதியாக கட்டப்பட்ட பணிகளுக்கு தொகை செலுத்துதல் கூடாது.
- அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள் மேற்கொள்ள இயலாது.
- மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான இடங்கள் / வழிபாட்டு தலங்களில் பணிகள் மேற்கொள்ள இயலாது.
- குட்டைகள் / ஊரணிகள் / ஆறுகள் / குளங்கள் / கால்வாய்கள் / வாய்க்கால்கள் தூர் வாருதல் கூடாது.



தன்னிறைவுத் திட்டம் 2015 - 2016 ஊ.ஒ.தொடக்கப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் மற்றும் சமையலறை கட்டிடம் கட்டுதல்
பெரியசீரகாபாடி ஊராட்சி மதிப்பீடு - ரூ. 30.00 இலட்சம் வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம்



தன்னிறைவுத் திட்டம் 2015–16 சமுதாயக்கூடம் கட்டிடம் கட்டுதல்
கோணகாபாடி ஊராட்சி மதிப்பீடு ரூ.60.00 இலட்சம் தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம்